[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1990 மே 11

நமது நாட்டில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சில சட்ட மன்றங்களில் தமிழகச் சட்டமன்றமும் ஒன்று. அத்தகைய புகழ்மிக்க சட்டமன்றத்தில் பணியாற்றுவதற்குக் கிட்டிய அரியதோர் வாய்ப்பை நான் என் வாழ்க்கையில் பெற்ற பெறுதற்கரிய பெரும்பேறு என்று கருதுகிறேன். நமது சட்டமன்றத்திற்கென்று ஒரு தனிச் சிறப்பும் பாரம்பரியமும் உண்டு. அதைப் பேணிக் காக்கவும் அதற்கு மென்மேலும் வலிவும் பொலிவும் ஊட்டிடவும் வேண்டுமென்ற எனது பணிவான வேண்டுகோளைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.'' (மேசையைத் தட்டும் ஒலி.)

10-40 மணி

(ஆ) மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பினைத் தொடர்ந்து திரு. தி. ரா. மாசிலாமணி அவர்களின் பெயர் முன்மொழியப்பெற்றது. எனவே, மேற்குறித்த பதவிக்கு திரு. தி. ரா. மாசிலாமணி அவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. விதி 111-இன் கீழ் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை.

துணை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வீரையன் அவர்கள் துணைக் கேள்விக்கு அளித்த பதிலில் திருத்தப்படவேண்டிய பகுதி. ''இவர்களெல்லாம் 9–4–1988-லேயே சில சலுகைகள் கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இவர்களுக்கு 20–2–1990-லேயிருந்து அந்தப் பழைய ஆணைக்கு உயிரூட்டி அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அந்தப் பழைய ஊதியத்தைப் பறிகொடுக்காமல், அவர்களுக்கு அந்த ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களுடைய பணிகள் வரன்முறை செய்யப்பட்டிருக்கிறது''.

1990 மே 11] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதற்குரிய திருத்தப் பகுதியாக கீழ்வருவனவற்றை இணைத்துக் கொள்ள வேண்டுகிறேன். ''ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவினரால், உடல் ஊனமுள்ள இவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் பதவியில் சேர்ந்த நாளிலிருந்து சம்பளம் பெற்றுக் கொள்வதற்குரிய அரசு ஆணை மற்றும் உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது''.

6. கவன ஈர்ப்பு.

(அ) முண்டந்துறை சரணாலயப் பகுதியில், காணிக்குடியிருப்பில் ஆதிவாசிகளின் பயிர்களும், வீடுகளும் வனத்துறையினரால் அழிக்கப்பெறுவது குறித்து.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, ''திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காணிக்குடியிருப்பில் பல வருடங்களாக சாகுபடி செய்து வந்த ஆதிவாசிகளின் நிலத்தில் உள்ள பயிர்களையும், வீடுகளையும் வனத்துறையினர் அழித்து அவர்களை வெளியேற்ற முயல்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நெல்லை மாவட்டம் முண்டந்துறை சரணாலயப் பகுதியில் இஞ்சுக் குழியில் இருக்கும் ஆதிவாசிகள் 7 நபர்கள் 10—9—1989 இல் வன விலங்குகள் தொந்தரவால் தங்களது விவசாயத்திற்கும் உயிருக்கும் சேதம் ஏற்படுகிறது என்று கூறி 20 ஆண்டுகளுக்கு முன் காணிக்காரர்கள் குடியிருந்த, விவசாயம் செய்த பகுதியில் இடம் ஒதுக்குமாறு கேட்டு, முன்னாள் வனப் பாதுகாவலர் மற்றும் வன உயிரினக்காப்பாளர் அவர்களிடம் மனு கொடுத்துள்ளார்கள். அதன்படி மேற்கூறிய 7 நபர்களுக்கும் அந்த இடம் கொடுக்கப்பட்டதாக தற்போதுள்ள வன உயிரின தென்மண்டல வனப் பாதுகாப்பாளர் தெரிவித்துள்ளார். இது விஷயமாக ஒரு புகார் கொடுக்கப்பட்டதன் பேரில், திருநெல்வேலி மண்டல வனப் பாதுகாப்பு படையினர் தணிக்கை செய்துள்ளனர். அவர்களிடம் தற்சமயம் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி புதிதாக இடம் கொடுக்க முடியாது என்று புலிகள் பாதுகாப்பு துணை இயக்குநர் கூறி, அரசு அனுமதி பெற்ற பின்பு தான் புதிய இடத்திற்கு வரவேண்டும் என்று காணிக்காரர்களிடம்